D E P O S I T I O N  O F  W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.216/2025

**P.W**. 1(LW1)

| | |
|---|---|
| Name | : **திரு.சுரேஷ்** |
| Father/Husband Name | : திரு. ஜெயராமன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது திருக்கழுக்குன்றத்தில் குடியிருந்து சுயதொழில் செய்து வருகிறேன். விபத்தில் காயம்பட்ட தர்ஷன் என்னுடைய மகன் ஆவார்.

2) கடந்த 25.05.2025 அன்று இரவு 9.30 மணியளவில் வீட்டின் அருகே உள்ள ஒரு கடைக்கு எனது மகன் தர்ஷன் கல்பாக்கம் திசை நோக்கி நடந்து சென்றபோது மாருதி ஆல்டோ கார் TN 19 K 2904 என்ற பதிவு எண் கொண்ட சில்வர் நிற கார் அதிவேகமாக வந்து வேகத்தடை இருந்ததையும் மீறி அஜாக்கிரதையாக வந்து என் மகன் மீது மோதிவிட்டு இழுத்து சென்றது. காரின் ஓட்டுனர் மது போதையில் இருந்தார். கார் நிற்காமல் சென்றுவிட்டது. இந்த சம்பவத்தை எனது மனைவி நின்று பார்த்துக் கொண்டிருந்தார். என் மகனுக்கு காதில் காயம் ஏற்பட்டிருந்தது. மேலும் என் மகனின் வலது காலில் எலும்பு முறிவும், கை கால்களில் சிராய்ப்பு

காயங்களும் ஏற்பட்டிருந்தது. என் மகனை நான் திருக்கழுக்குன்றம் தனியார் மருத்துவமனையில் என் மகனுக்கு முதல் உதவி சிகிச்சைக்கு அழைத்துச் சென்று பின்னர் செங்கல்பட்டு ரங்கா மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக உள்நோயாளியாக சேர்த்தேன். தாறுமாறாக வந்த மாருதி காரை திருக்கழுக்குன்றம் எம்.ஜி.ஆர் சிலை அருகே பொதுமக்கள் பிடித்து நிறுத்தினார்கள். காரின் ஓட்டுனரை காவல் நிலையத்தில் காவல் துறையினர் வசம் ஒப்படைத்தார்கள். போலிசார் மருத்துவமனையில் வந்து விசாரணை செய்தார்கள். பின்னர் விபத்து குறித்து மறுநாள் அதிகாலை 1.30 மணியளவில் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

விபத்து நடந்த அன்றைய தினமே அதிகாலை 1.30 மணியளவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரை நான் சொல்ல சொல்ல என் தம்பி எழுதினார். என் தம்பிக்கும் விபத்து குறித்து தெரியும். அதன் பிறகு போலிசார் என்னை விசாரித்து வாக்கு மூலம் வாங்க வில்லை என்றால் சரிதான். என் மனைவி விபத்தை நேரடியாக பார்த்தது குறித்து என்னுடைய புகாரில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் விபத்து நடந்த போது வீட்டிற்குள் இருந்தேன் என்றால் சரிதான். திருக்கழுக்குன்றம் மேட்டுமங்களத்தில் உள்ள அரவிந்த் மருத்துவமனையில் என் மகனுக்கு முதலுதவி சிகிக்சை அளிக்கப்பட்டது என்றால் சரிதான். அரவிந்த் மருத்துவமனையில் என் மகன் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் எதையும் நான் காவல் துறையினயிரிடம்

கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை மடக்கி பிடித்தவர்களின் விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் சொன்னது போல் வாகனம் எதுவும் நிற்காமல் போகவில்லை என்றாலும், யாரும் எம்.ஜி.ஆர் சிலை அருகே மடக்கி பிடிக்கவில்லை என்றாலும் சரியல்ல. திருக்கழுக்குன்றம் – கல்பாக்கம் சாலையில் எனது வீடு தெற்கு புறம் நோக்கி அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி சாலையில் எப்போதும் வாகன போக்குவரத்து இருந்துக் கொண்டு தான் இருக்கும் என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கு எதிர் திசையில் தான் மளிகை கடை உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் வேக தடை உள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் மின் மாற்றி பழுதாகி மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேட்டு மங்களத்தில் தர்ஷன் மோட்டார் கிளை இல்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் மேட்டு மங்களத்தில் உள்ள தர்ஷன் மோட்டார்ஸ்க்கு அருகே தான் விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தர்ஷன் மோட்டார்ஸ் என்று குறிப்பிட்டுள்ளேன். தர்ஷன் மோட்டார்ஸ் சட்ராஸ் ரோட்டில் மட்டும் தான் இருக்கிறது என்றால் சரிதான். வேக தடை இருக்கும் போது பொதுவாக வாகனங்கள் நின்று தான் செல்லும் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனர் குடி போதையில் இருந்தார் என்கிற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் மின் தடை இருந்ததால் என் மகன் வாகனங்களை கவனிக்காமல் திடீரென சாலையை கடக்க முற்பட்டபோது விபத்து ஏற்பட்டது என்றாலும், அந்த விபத்திற்கு அவருடைய கவனக்குறைவுதான் காரணம் என்றாலும் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கும் விபத்திற்கும்

சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. மேற்படி விபத்தானது என்னுடைய மகனின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்காக நஷ்ட ஈடு கோரி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் மகனுக்கு நஷ்ட ஈடு கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் வழக்கிற்கு ஏதுவாக புகார் அளித்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேள்விப்பட்டதாக சொன்ன சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.